ரிஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 6 நவம்பர், 1943 நெ. 8

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம்.எல்.ஏ.

எஸ். சத்தியநாராயணு.

எடிடர்.

ஸ்ரீமான்

வி. விப்பன்ணு, பி.ஏ., பி.எல்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.


1. தலையங்கம்.—

   நிர்வாக உத்தியோகஸ்தர்கள் பயிற்சி ... 57

   மது விலக்கு திட்டம் ரத்து ... 59

2. மாமிசத்திற்கு பிராணிகள்—உண்மை என்ன? ... 61

3. ஒரு நாளில் மூன்றுதரம் பால் கறப்பது ... 62

4. மில்குத்தலும், கைகுத்தலும், தீட்டினதும், தீட்டாதது மான அரிசி ... 64

5. நெல்பயிரும் மீன் வளர்த்தலும் ... 66

6. வர்த்தமானங்களும், குறிப்புகளும் ... 66





கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# The Village Panchayat Journal.

VOL. VI] NOVEMBER, 1943 [No. 8.

*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

---

## Training of Executive Officers.

We have urged in these pages that intelligent leadership has to be provided for Village Panchayats by proper training of rural guides who shall function somewhat as Executive Officers for individual Panchayats but in essence be amenable to the control of Joint Committees. For that purpose we advocated that a College for rural guides should be established. We are yet far away from all this; because, the scheme of Joint Committees has somehow been shelved by the Government though they have not expressed themselves against it and though, at one stage, recognition was given to the soundness of the idea.

The Government, however, have followed a consistent policy of appointing Executive Officers to Panchayats. For sometime, Panchayats with an annual income of above Rs. 5,000 were considered in this connection. Now that limitation also has ceased to operate.

When the Government had in their view Panchayats of big incomes they launched a scheme of training for the Executive officers. Men with high general educational qualifications were chosen. About 300 only were trained. At the time we had our own say about the scheme. We pointed out the defects therein.

Now that the Rs. 5,000 limit has been abrogated, necessarily a very much larger number of trained men would be necessary. As the pay of these officers also will have to be small to suit the conditions of Panchayats whose incomes are meagre, the standard of general education required will have to be lowered. It is time, therefore, that the scheme of training is examined afresh by the Government.

The organisation of Panchayats is necessarily the fundamental democratic measure for our country. It is, on the administrative side, the counter part of the Co-operative Society on the economic side. It would be folly to look at the Panchayat as a mere departmental institution representing the Government at the top. Its basic popular side should never be forgotten. Therefore, the Executive

Officer that has to take charge of it should be a man who shall be a friend, philosopher and guide instead of an official mentor. To train such men and create in them a fair enthusiasm for public service, a mere departmental scheme will certainly lack the necessary psychological outlook. So, the agency that is used is of very great importance. We should suggest, without hesitation, that the training of Executive Officers for Village Panchayats should be somewhat on the same pattern as for the employees in Co-operative institutions. The training in co-operation, principle and law, audit etc. for clerks and supervisors is given by 4 institutes in the Presidency and the Provincial Co-operative Union holds examinations and issues certificates. The course is for one year and there are 6 papers. Practical Training for 3 monhts is also provided. The minimum qualification is S. S. L. C. diploma. There is a Committee of Provincial Co-operative Union to co-ordinate the activities of the 4 institutes. The Registrar is a member of the Committee. He signs the certificates of pass issued to candidates.

In a similar manner we may be able to provide well trained men both for Executive Offices as well as Clerical Offices. At present the clerks are there who have had no training. Such of the clerks as are S. S. L. C. may be given the training. Their prospects may be bettered. They may be kept in charge of single panchayats or where the Panchayats are small a group of them may be told off to one of these men. With illiterate Presidents and Panchayatdars in some cases, this arrangement will probably be ideal for the time being.

While the Inspector of Local Boards shall have his place in the scheme, the training scheme should primarily be placed in the hands of an institution which shall represent the Panchayats themselves and contain a strong non-official element. It is then possible to get into the service men who are imbued with a due sense of public service, though we are conscious, that at no stage can we entirely eliminate undesirables and inefficients.

So far as the Syllabus of studies goes, we do not, at this stage, desire to enter into much of detail. We have discussed the subject already and it is not much use repeating our own view about details. We would, however, point out that no man who has not a fair grasp of rural problems will ever make a successful executive officer in a Panchayat office. Village polity has all to be shaped by the Panchayat. So, a knowledge of essentials of account keeping, administrative routine, and the law relating thereto, will not be sufficient. While these must form the rock on which administration is conducted, the policy that should guide the administrative machinery should always be provided for in any training. It is the soul and administrative detail is merely the flesh, blood and bone of life's progress.

Moreover men cast away in remote villages in our country, be they Executive Officers or others have still so few opportunities of keeping ahead of times. Therefore, it is always necessary to provide scope to these men, practically every year, to come into contact with the wider world and get a refresher course. We mention this here to point out that the whole public life of a Panchayat

Executive Officer should be properly planned; for according to us, he, more than others, has to play the role of the adviser to the village democracy.

We desire earnestly to suggest that the Government should immediately get into touch with such non-official bodies as may be interested in the matter, as for example, the Madras Provincial Union of Panchayat Boards, the Madras Provincial Co-operative Union, and by consultation and conference put this matter upon a proper basis.

We are aware that the Government would feel that they are too heavily preoccupied with war to bestow much attention on a subject like this. We would very respectfully submit that the question of Panchayats is really a question of to reconstruction for peace so much to the forefront today. As the fundamental organisation responsible for village life as a whole, the Panchayat is the one institution with its counterpart the Co-operative Society, that has to shoulder the duty of reconstruction at the bottom. Therefore, we feel we have a right to demand that the Government should give prompt attention to this subject. We do hope, the Government will respond.

## Prohibition Passes.

The present Government of Madras have raised the Prohibition programme that the Congress Ministry put into operation in Cuddapah, Salem and North-Arcot. he main reason has been given as the last. This step will bring revenue to the Government in these hard days of extra liabilities. If the Government had put their action on that basis only the movement could have come back automatically after the war. The temporary set back could have been borne. But the Government first state that crime against prohibition has increased, that the enthusiasm of the non-officials to support prohibition has waned and come to the conclusion that prohibition has failed. The matter of finance is a supplementary.

It does not appear proper that such an important measure of public weal, put into force by an elected majority party, should be repealed without ascertaining public opinion. The Government could easily have notified that, for reasons stated, they would give up the programme allowing a year's further time. The leaders of the people could have been consulted. There would have been enough assistance given to the Government to remove such difficulties as stand in the way.

Even now it is not too late The Government intend that their action should take effect from the first of January 1944. They have only to change it into first of January 1945. What action the popular side will take to help the Government to carry on prohibition will then be clear.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

| Vol. 6 | நவம்பர், 1943 | No. 8 |
|---|---|---|

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற் செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

---

## தலையங்கம்.

### நிர்வாக உத்தியோகஸ்தர்கள் பயிற்சி :—

கிராம பஞ்சாயத்துகளுக்கு புத்திசாலித்தனமாக வழிகாட்டிகளாக இருக்கவும், கூட்டுக்கமிட்டிகளின் மேல்பார்வையில் வேலை செய்யவும் கிராம ஊழியர்களை பயிற்சி செய்து, நிர்வாக உத்தியோகஸ்தர்கள் போல் பஞ்சாயத்துகளுக்கு ஏற்படுத்த வேண்டுமென்று நாம் பல தடவை வற்புறுத்தியிருக்கிறோம். அதன்பொருட்டு கிராம ஊழியர்களுக்கு பயிற்சியளிக்கும் ஒரு கலாசாலை ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் எழுதியிருந்தோம். ஆனால் இவைகள் எல்லாம் ஏற்பட இன்னும் வெகு காலம் செல்லும். ஏனெனில் கூட்டுக்கமிட்டி திட்டத்தை, கவர்மெண்டார், அதற்கு விரோதமாக மனப்பான்மை கொண்டில்லாவிட்டாலும், தற்போது தள்ளிப் போட்டு விட்டார்கள்.

ஆனால் பஞ்சாயத்துகளுக்கு நிர்வாக உத்தியோகஸ்தர்கள் நியமன விஷயத்தில் கவர்மெண்டார் ஒரு திட்டமான கொள்கையை அனுசரித்து வருகிறார்கள். சிலகாலம் வருஷம் 5000 ரூபாய்க்கு மேல் வருமான முள்ள பஞ்சாயத்துகள் மாத்திரம் பொறுக்கப்பட்டன. தற்போது அந்த நிபந்தனை எடுபட்டுவிட்டது. அதிக வருமானமுள்ள பஞ்சாயத்துகள் விஷயத்தில் நிர்வாக உத்தியோகஸ்தர்களை பயிற்சியளிக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதிக படிப்புள்ளவர்களாக 300 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டார்கள். அப்போது இந்த திட்டத்தின் குறைகளை

நாம் எடுத்துச் சொன்னோம். இப்போது அந்த 5000 ரூபாய் வரும்படி அளவு எடுக்கப்பட்டுவிட்டதால் அநேகருக்கு மேற்படி உத்தியோகத்திற்கு பயிற்சியளிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். பஞ்சாயத்துகளின் சக்திக் கேற்ப இந்த உத்தியோகஸ்தர்களின் சம்பளமும் குறைவாக இருக்கு மாதலால், உத்தியோகத்திற்கு மட்ட கல்வியடைந்தவர்களையும் நியமிக்க வேண்டி வரும். ஆகையால் கவர்மெண்டார் மறுபடியும் பயிற்சியளிக்கும் திட்டத்தை புனராலோசனை செய்யவேண்டும்.

நம் தேசத்தில் பஞ்சாயத்துகளை ஸ்தாபிப்பது ஜனநாயக வேலையில் முக்கியமானதாகும். பொருளாதார விஷயத்தில் கோவாபரேடிவ் சங்கம் எப்படியோ அப்படி நிர்வாக விஷயத்தில் பஞ்சாயத்தாகும். அதை கவர்மெண்டு தலைமையின் கீழ் ஒரு இலாகாவாகமாத்திரம் எண்ணுவது தவறு. அதன் ஜனநாயக அம்சத்தை மறக்கக்கூடாது. ஆகையால் நியமிக்கப் படும் நிர்வாக உத்தியோகஸ்தர், வெறும் கவர்மெண்டு ஊழியன் என்பது மட்டுமல்லாமல் அதன் நண்பனாகவும், வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும். இப்படி பயிற்சியளிக்க வெறும் இலாகாவினால் தயார் செய்யப் பட்ட எந்த திட்டமும் திருப்தியளிக்கக்கூடியதாக இருக்காது. ஆகையால் பயிற்சியளிக்கப்படும் முறை மிக முக்கியமானது. கோவாபரேடிவ் சங்கங்களுக்கு சிப்பந்திகள் பயிற்சியளிக்கப்படும் முறையே இதற்கும் அனுசரிக்கப்படவேண்டும் என்று தீர்மானமாக நாம் கூறுவோம். கோவாபரேடிவ் இலாகா குமாஸ்தாக்களுக்கும் சூபர்வைசர்களுக்கும் கோவாபரேஷன் கொள்கைகள், சட்டம், கணக்கு பரிசீலனை இவைகள் மாகாணத்தில் 4 பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுக்கப்பட்டு, மாகாண கோவாபரேடிவ் சங்கம் பரிக்ஷை நடத்தி, சர்டிபிகேட்டுகள் வழங்கப்படு கின்றன. ஒரு வருஷம் படிப்பு. 6 வினு பேபர்கள் கொடுக்கப்படுகின்றன. 8 மாதம் நடைமுறையில் பயிற்சியளிக்கப்படுகிறது. ஸ்கூல் பைனல் தேறின வர்கள் இதில் சேரலாம். இந்த நான்கு பள்ளிக்கூடங்களும் மாகாண கோவாபரேடிவ் சங்கத்தின் கமிடியின் மேல்பார்வையிலிருக்கின்றன. இதில் ரிஜிஸ்த்ரார் ஒரு அங்கத்தினர். தேறும் மாணக்கர் சர்டிபிகேட்டு களில் அவர் கையெழுத்திடுகிறார்.

இதேபோல் பஞ்சாயத்து நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கும் குமாஸ் தாக்களுக்கும் பயிற்சியளிக்கலாம். தற்சமயம் அவர்களுக்கு பயிர்ச்சியோ, ஒரு சிறு பஞ்சாயத்து கூட்டத்தையோ ஒப்படைக்கலாம். எழுத்தறிவில் லாத பஞ்சாயத்து தலைவர்களும், பஞ்சாயத்தார்களும் இருக்கும் இச்சமயம் இந்த ஏற்பாடு பயனளிக்கும். அந்த ஸ்தாபனம், ஸ்தலஸ்தாபன இன்ஸ் பெக்டருடன் உத்தியோகப் பற்றற்றவர்களடங்கிய பஞ்சாயத்துகளின் பிரதிநிதிகள் கொண்டதாக இருக்கவேண்டும். அப்போதுதான் பொது ஜன சேவை செய்ய ஆர்வங்கொண்டவர்களை அடையமுடியும்.

என்ன என்ன கற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்னும் விவரத் தைப்பற்றி இப்போது நாம் குறிப்பிட விரும்பவில்லை. ஏற்கனவே அதைப்

பற்றி பிரஸ்தாபம் செய்திருக்கிறோம். கிராமாந்தரபுரங்களின் பிரச்னைகளை சரிவரயுணராத எந்த உத்தியோகஸ்தரும் நிர்வாக உத்தியோகஸ்தர் பதவிக்கு லாயக்காகமாட்டார் என்பதை குறிப்பிட விரும்புகிறோம். பஞ்சாயத்துதான் கிராம நிர்வாக போக்கையே உருவாக்கவேண்டும். ஆகையால் கணக்கு வைப்பது, நிர்வாகத்திறமை, அதற்கு அவசியமான சட்ட ஞானம், இவைமட்டும் போதாது. இதோடு கூட நிர்வாக கொள்கைகளைப்பற்றியும் பயிற்சியளிக்க வேண்டும். இதுதான் வெறும் நிர்வாகத்தை விட அதிமுக்கியமானது.

மேலும் நம் தேசத்தில் அநேக மூலைமுடுக்குகளில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு அப்போதைக்கப்போது ஏற்படும் பல மாறுதல்களை தெரிந்துக் கொள்ள சந்தர்பம் கிடைப்பதில்லை. ஆகையால் இவர்களுககெல்லாம் வருஷம் ஒரு முறை ஒன்று கூட்டி மற்ற இடங்களில் நடக்கும் சம்பவங்களை யறிந்துக்கொள்ளும்படி செய்வது மிக அவசியம். இதைப் பற்றி ஏன் இவ்விடம் பிரஸ்தாபிக்கிறோம் என்றால் பஞ்சாயத்து நிர்வாக உத்தியோகஸ்தருடைய பொது வாழ்க்கையைப் பற்றி திட்டம் வகுத்து வேலை செய்யவேண்டும் என்பதற்காகத்தான். ஏனென்றால் மற்றவர்களை விட இவர்தான் கிராம ஜனநாயகத்திற்கு ஆலோசனையாளராக இருக்கக் கூடியவர்.

இது விஷயமாக கவர்மெண்டு மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் சங்கம், மாகாண கோவாபரேடிவ் சங்கம் இவை போன்ற உத்தியோகப் பற்றற்ற சங்கங்களை கலந்தாலோசித்து இது விஷயமாக சரியான திட்டத்தை வகுக்க வேண்டும்.

யுத்தம் காரணமாக கவர்மெண்டு தன் முழுகவனத்தை செலுத்த வேண்டியிருக்கும் இந்த சமயத்தில், இதைக்குறித்து ஆலோசிக்க கவர்மெண்டுக்கு அவகாசம் இருக்காது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் சமாதானம் ஏற்பட்டபின் செய்யவேண்டிய புனருத்தாரண வேலையைப் பற்றி இப்போது பேசப்பட்டு வருகையில் இதைக்குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்பது எங்கள் அபிப்பிராயம். அவ்விவாரத்தில் பஞ்சாயத்தும், கோவாபரேடிவ் சங்கமும்தான் இனி ஏற்படப்போகும் நிர் மாண வேலைகளின் பொறுப்பை தாங்க வேண்டிவரும். ஆகையால் இதை கவனிக்கும்படி கேழ்க நமக்கு உரிமையுண்டு. இதை கவர்மெண்டு கவனிப்பார்கள் என்று நம்புகிறோம்.

---

## மதுவிலக்கு திட்டம் ரத்து:—

காங்கிரஸ் மந்திரி சபை, கடப்பை, சேலம், வட ஆற்காடு ஜில்லாக்களில் அமுலுக்குக் கொண்டுவந்த மதுவிலக்கு சட்டத்தை இந்த கவர்மெண்டார் ரத்து செய்து விட்டார்கள். அதிகப்படியான செலவு ஏற்பட்டிருக்கும் இந்தக்காலத்தில் அதிக வருமானம் கிடைக்க வழி இது, என்

பதுதான் உண்மையான காரணம். அது கடைசி காரணமாக சொல்லப் பட்டிருக்கிறது. இந்த காரணத்தினுல் மாத்திரம் சட்டம் ரத்து செய்யப் பட்டிருந்தால், யுத்தம் முடிந்தபின் மறுபடியும் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்று நம்ப இடமுண்டு. நாம் இந்த பிற் போக்கான நடத்தைக்கு சமாதானம் செய்துகொள்ளலாம். ஆனுல் கவர்மெண்டார், மதுவிலக்கு சட்ட குற்றங்கள் அதிகரித்து விட்டதாகவும், அதை நடத்து வதில் பொது ஜன உத்சாகம் குன்றிவிட்டதாகவும், அது வெற்றிகரமாக நடக்கவில்லை என்ற சாக்கு சொல்லி, அதிக வருமானத்தைப்பற்றி கடைசி யாகத்தான் சொல்லுகிறார்கள்.

இந்த முக்கியமான, பொது ஜன ஆதரவு பெற்ற கவர்மெண்டார் கொண்டுவந்த ஏற்பாட்டை, பொது ஜன அபிப்பிராயம் கோருமல் அப்படி மாற்றுவது சரியாகத் தோன்றவில்லை. கவர்மெண்டார் மேற்படி காரணங் களைச் சொல்லி தாங்கள் இந்த நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்து ஒருவருஷ அவகாசம் கொடுத்திருக்கலாம். பொது ஜனத் தலை வர்களை கலந்தாலோசித்திருக்கலாம். கவர்மெண்டாருக்கு தென்படும் இடஞ்சல்களைப் போக்க தகுந்த உதவி கிடைத்திருக்கும்.

இப்போது தான் என்ன. 1944 ஜனவரி முதல் இது ஏற்படும் என்று கவர்மெண்டார் தெரிவித்திருக்கிருர்கள். அது 1—1—1945 ஆக மாற்றப் படும். அதற்குள் பொது ஜனங்கள் அச்சட்டத்தை அமுல் நடத்துவதில் கவர்மெண்டாருக்கு எவ்வளவு உதவிசெய்கிருர்கள் என்பது நன்கு புலப்படும்.

---

# மானேஜர் அறிக்கை.

---

முன்னமேயே நம் கருத்தை வெளியிட்டிருக்கிறபடி, வரும் டிஸம்பர் மாதம் இப்பத்திரிகை இதழ் வெளிவராமலிருக்கலாம் என்பதை வாசகர்கள் தயவுசெய்து குறிக்கவும்.

---

# மாமிசத்திற்கு பிராணிகள்—உண்மை என்ன?

சென்னை கவர்மெண்டு பிரஸ் அறிக்கை 25-10-'43.

நமது மாகாணத்தில் துருப்புகளின் மாமிசத்திற்காக அதிக பிராணிகள் தேவையாக யிருப்பதால், மாகாணத்திலுள்ள உபயோகமுள்ள பிராணிகளெல்லாம் கொல்லப்படுகின்றன என்ற ஒரு அபிப்பிராயம் பொதுவாக இருக்கிறது. துருப்புகளுக்காக அதிக விலை கொடுத்து பிராணிகள் வாங்கப்படுவதால்தான் அவைகளின் விலை மிகவும் அதிகரித்துவிட்டது என்றும் எண்ணுகிறார்கள். இது விஷயம் எவ்வளவு தூரம் துருப்புகளின் தேவையினால் நிலைமையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி கவர்மெண்டாரால் பரிசீலனை செய்யப்பட்டது. கீழ்கண்ட விவரங்களிலிருந்து உண்மை தெரியவரும். மிலிடரி கண்ட்ராக்டர்களுக்கு 1 பவுண்டு மாமிசத்திற்கு 4 அணா கொடுக்கப்படுகிறது. செத்த பிராணியின் கனம் 120 பவுண்டு முதல் 160 வரையிலிருப்பதால், கண்ட்ராக்டர்களுக்கு ஒரு பிராணிக்கு 40 ரூபாயிலிருந்து 60-க்கு மேல் விலை கொடுத்தால் கட்டாது. கன்று ஈன்றக்கூடிய பசு ஒன்று 60 ரூபாயிக்கு குறைந்து கிடைக்காது. சாதாரண உழவு மாடுகூட ஒரு ஜதை 200 ரூபாயாகிறது. ஆகையால் கண்ட்ராக்டர்கள் மாட்டை 60 ரூபாயிக்குமேல் வாங்கி துருப்புகளுக்கு பவுண்டு 4 அணாவுக்கு கொடுக்க முடியாது.

நல்ல தேக நிலைமையிலிருக்கும் 10 வயதிற்குட்பட்ட உழவு மாடுகளையும், பால் கொடுக்கும் பசுக்களையும், சினையாக இருக்கும் பசுக்களையும் கொன்று மாமிசம் சப்ளை செய்யக்கூடாதென்று இந்தியா கவர்மெண்டார் உத்திரவிட்டிருக்கிறார்கள். அப்படி கண்ட்ராக்டில் ஒரு ஷரத்து ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சென்னை கவர்மெண்டார் 60 ரூபாயிக்குமேல் விலையாகும் கறவை பசுக்களையாவது உழவுமாடுகளையாவது மிலிடரி அதிகாரிகளை மாமிசத்திற்காக வாங்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படி ஒப்புக்கொண்டு ஒரு பிராணிக்கு 35 ரூபாயிக்குமேல் விலை கொடுப்பதில்லையென்றும், கண்ட்ராக்டர்களுக்கு சராசரி 30 ரூபாயிக்குமேல் ஒரு பிராணிக்குக் கொடுப்பதில்லை யென்றும் தெரிவித்திருக்கிறார்கள். கண்ட்ராக்டர்கள் கொண்டுவரும் பிராணிகளை வெடர்னரி உத்தியோகஸ்தர்கள் பரீக்ஷை செய்த பின்னரே தாங்கள் வாங்கவும் சம்மதிக்கிறார்கள். அப்படி பரீக்ஷை செய்து பார்க்க கவர்மெண்டார் உத்தேசித்திருக்கிறார்கள்.

1940-ல் எடுத்த கணக்குபடி இந்த மாகாணத்தில் 3 வயதுக்கு மேல்பட்ட பிராணிகளின் எண்ணிக்கை 12,191,393, இதில் 15 சத விகிதம், அதாவது 1,828,710 விவசாயத்திற்காவது உழவிற்காவது உபயோகமற்றதாக இருக்கும். இதில் பாதி எண்ணிக்கை கொல்லுவதற்கு லாயக்கில்லை என்று மிலிடரி அதிகாரிகள் கருதினாலும், இன்னும் 9,00,000 பிராணிகள் துருப்புகளுக்கும், இதர ஜனங்களுக்கும் உபயோகத்திற்கு மிச்சப்படும். அந்த தேவை வருஷத்திற்கு 3,00,000-க்கு மேல் போகாது. ஆகையால் நம் மாகாணத்தில் இருக்கும் கால்நடைகளின் இருப்பு எல்லாத் தேவைகளுக்கும் போய் அதிகமாகவே இருக்கிறது. மிலிடரி அதிகாரிகள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியமேயில்லை.

எல்லா சாமான்களின் விலை அதிகரிப்பினால்தான் கால்நடைகளின் விலையும் அதிகரித்திருக்கிறது. இன்னும் வேறு காரணங்களும் உண்டு. அவைகளின் உணவு பொருள்களின் விலை அதிகரிப்பால் அவைகளை காப்பாற்ற அதிக செலவாகிறது. அதிக ஆகார உற்பத்தி பிரசாரத்தினாலும், போக்குவரத்துக்களுக்கு மாட்டு வண்டிகள் அதிகப்படி உபயோகப்படுவதாலும், அதிக தேவைக்கு ஏற்றாற்போல் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. மேலும், மேன்மையான எருது விஷயத்தில் நம் மாகாணம் குறைவுபட்ட மாகாணம். சுற்றுப்பட்ட மாகாணங்களிலிருந்து அவைகள் ஏற்றுமதி தடுக்கப்பட்டுவிட்டதால் இங்கு நிலைமை இன்னும் கஷ்டமாகிவிட்டது. ஆகையால் உத்திரவின்றி மாகாணத்திற்கு வெளியில் மாடுகள், ஆடுகள் இவைகளை அனுப்பக்கூடாது என்று இந்த கவர்மெண்டு உத்திரவிட்டிருக்கிறது.

மாகாண கால்நடை அபிவிருத்தி சங்கத்தின் சிபார்சின்பேரில், துருப்புகளுக்காவது, மற்றவர்களுக்காவது மாமிசத்திற்காக கன்று ஈன்றக்கூடிய மறத்துபோன பசுக்களையாவது, வேலைக்கு லாயக்கான சிறிய எருதுகளையாவது கொல்லக்கூடாது என்று தீர்மானித்திருக்கிறார்கள். அதன்படி செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்போகிறார்கள். கால்நடை செல்வத்தை விருத்திசெய்ய கவர்மெண்டார் எல்லாவித முயற்சியும் செய்வார்கள்.

---

# ஒருநாளில் மூன்றுதரம் பால் கறப்பது.

---

## (ஆர்தர் ஆமாஸ், கென்டு)

[அடியில் கண்ட விஷயம் இங்கிலாந்தில் ஒரு ஆங்கில விவசாயின் அனுபவம். தகுந்த மாறுதல்களுடன் இந்த முறையை நம் தேசத்திலும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும், எனகருதுகிறோம்.—ப. ர்.]

நிறைய பால் கொடுக்கக்கூடிய சில பசுக்களை அதிக பால் எடுப்பதற்காக ஒரு நாளில் 3 தடவை கறப்பது சாதாரணமாக உண்டு. இந்த கட்டுரையில் சாதாரண பசுக்களை அதிக பால் கொடுக்கும்படி செய்வதைப்பற்றிய முறை சொல்லப்படுகிறது. இந்த முறை அனுஷ்டிக்கப்படுவதற்கு முன் பசுக்கூட்டம் ஒரு வயதான இடையன் வசம் இருந்தபோது பசுக்கள் ஒரு நாளில் 800 காலன்கள் கறப்பது அரிது. அநேகமாக 600 முதல் 750 காலன்கள் வரையில் கொடுத்து வந்தன. 1936ல் இந்த கிழவன்போய், ஒரு சிறுவன்—முன்பு பசுக்கள் அனுபவமில்லாதவனும், இரண்டு வருஷ பயிர் அனுபவமே கொண்டவனும் ஆனவன், வந்தான். ஒரு சிறிய காலம் சில ஏற்பாடுகள் செய்த பின் ஒரு கறக்கும் கருவியைக் கொண்டு பால் மூன்று வேளை கறக்க ஆரம்பிக்கப்பட்டது. அந்த கூட்டம் கலப்படமானது. மாடுகள் விலை மட்டமானதுதான். ஆரம்பத்தில் நோய் அவைகளில் இருந்து வந்தது. இப்போது அவைகளின் தேக நிலைமை திருப்திகரமாக இருக்கின்றது.

சாதாரணமாக, கன்று பாலூட்டுவதால், பிசுவிற்கு பால் சுரக்கிறது. பால் இரண்டுதரம் கறக்கப்படுவதால் மடி அதிக பாலுடன் அதிக நேரம் இருக்கிறது. மூன்றுதடவை கறப்பதால் மடி அடிக்கடி காலியாகிவிடுவதால், பால் சுரப்பதை

அதிகப்படுத்தும். அதனால் பால் கொடுக்கும் தசைகள் வலுவடைந்து, மடிக்கு ரத்தோட்டம் அதிகரிக்கும். முதல் முதல் கறக்கும்போது இப்படியேற்பட்டால் பின்னிட்டு கறக்கும் காலங்களில் இன்னும் அதிக பால் கொடுப்பது சகஜமாகிறது.

பசுக்களை இரண்டு மாதம் கறப்பதில்லை. கன்று போடுமுன் பசுக்களுக்கும் எருமைகளுக்கும் எப்போதெல்லாம் தேவையோ அப்போது தீனிப்போடப்படுகிறது. அவசியமானால் கன்று போடுமுன் மடியிலிருந்து கொஞ்சம் பால் எடுக்கப்படுகிறது. கன்று போட்டவுடன் அவைகளை அப்புறப்படுத்தி, 3 நாளைக்கு பசுக்களை இரண்டு தடமும், நான்காவது நாள் முதல் மூன்று தடமும் கறக்கப்படுகிறது 5-30, 1-30, 7-30 மணிக்கு கறக்கப்படுகின்றன. கறக்கும்போது சாதாரணமாக அவைகளை கட்டவேண்டிய அவசியமேற்படுவதில்லை. நல்ல தேக நிலமையிலிருக்கும் ஒவ்வொரு பசுவும், எருமையும் மூன்று தடம் கறக்கப்படுகிறது. இப்படி 6 மாதம்—அ.து. கறவை நாட்களில் மூன்றில் இரண்டுபாகம்—செய்யப்படுகிறது. சில சமயங்களில் இன்னும் அதிக நாட்கள் கறக்கப்படுகின்றன. மறுபடி இரண்டு வேளை (6-30, 1-30 மணிக்கு) கறக்கும்போது, கொடுக்கப்படும் பால் குறைந்து விடுகிறது. ஆனால் இந்த சமயம், பசுவை கறக்காமல், போடப்போகும் கன்றை போஷிக்க உதவும்படி விட்டுவிடுவது நல்லது.

இதனால் அதிகப்படி பால் கிடைத்திருக்கிறது. 1942ல் மொத்தம் 21, அல்லது 25 மாடுகளில் 20 மாடுகள் பூராக பால் கொடுத்தது சராசரி 943 காலனாயிற்று.

அதில் ஒரு தனி ஜாதி 3-வது ப்ளூ என்ற பெயர் கொண்ட ஒரு பசுவைக் குறிப்பாக பிரஸ்தாபிக்கவேண்டும். இரண்டுதரம் கறந்தபோது இது 700 காலன்களுக்குமேல் பால் கொடுத்ததில்லை. ஆனால் மூன்று வேளை கறக்க ஆரம்பித்தவுடன் அது 1435 காலன்கள் கொடுத்தது. 6-வது ஈற்றுக்கு பின் இது 1800 காலன்களாயிற்று. 8-வது ஈற்றில் 12 வாரங்களில் 507 காலன்கள் கொடுத்தது.

ஆனால் சில பசுக்களும், எருமைகளும் அதிக நாள் அதிக பால் கொடுத்துக் கொண்டேயிருக்கும்படி செய்ய முடிவதில்லை. சரியாக தீனி போட்டால் முதல் ஈற்றைவிட இரண்டாவது ஈற்றில் பால் அதிகரிக்கிறது. சுமார் 100 முதல் 200 காலன்கள்வரை அதிகரிக்கிறது.

கிரமமாக 12 மாதத்திற்கு கன்று போடும்படி அதிக சிரமமின்றி ஏற்பட்டு வந்தது. மடியிலிருந்து பால் அடிக்கடி எடுக்கப்படுவதால் அவைகள் உருவம் சரியானபடி இருக்கின்றன.

இடையனுக்கு தகுந்தபடி சம்பளமும் விடுமுறை நாட்களும் கொடுக்கப்பட வேண்டும். கால் நடை சம்பந்தமான மகாநாடுகளுக்கும், காக்ஷிகளுக்கும் அவர்களை அனுப்பவேண்டும்.

நோயில்லாமல் சாதாரண தேக நிலமையிலிருக்கும் மாடுகளை மூன்று தடவை கறப்பதால் லாபமேற்படுகிறது என்பது என் அனுபவம்.

# மில் குத்தலும், கைகுத்தலும், தீட்டினதும், தீட்டாததுமான அரிசி.

---

(K. சூர்யநாராயண ராவ்.)

[இந்த ருசிகரமான கட்டுரையில் ஸ்ரீ சூரியநாராயண ராவ், நம் உணவைப்பற்றி எழுதுகையில் முதலில் நம் உணவு தயார் செய்யப்படும் அக்னி எவ்வளவு, எப்படி, ஏன் இருக்கவேண்டும் என்று ஆரம்பித்து, நெல் பயிர் சத்து இயற்கையின் உதவிமூலம் எவ்வளவு எவ்விதம் ஏற்படுகிறதென்றும், அதை சத்து குன்றாமல் நாம் உணவாக எப்படி உபயோகப்படுத்த வேண்டுமென்றும், நெல்லை மில்களில் போட்டு குத்தி தீட்டுவதால், தேகத்திற்கு அதிக சூடு உண்டாகி பல தீங்குகள் ஏற்படுவதைப்பற்றியும், அவற்றை நிவர்த்திக்க தீட்டாது கைக்குத்தல் அரிசிக்கு சமானது வேறெதுவுமில்லை யென்றும், தற்போது ஏற்பட்டிருக்கும் உணவு நெருக்கடி காலத்தில் மில்குத்தல் அரிசியைவிட கைக்குத்தல் அரிசி $\frac{1}{4}$ மடங்கு அதிக ஜனங்களுக்கு உபயோகப்படுவதுடன், தேகவலிமை விருத்தியாகி, கிராமாந்தர பிரதேசங்களில் குத்தும் கூலியாட்களுக்கு ஒரு நல்ல தொழில் ஏற்பட்டு, இந்த தவிட்டை உணவாகக்கொள்ளும் கால்நடைகளும் விருத்தியாகும் இன்னும் பல நன்மைகள் ஏற்படும் என்று வெகு அழகாக எடுத்துக்காட்டி யிருக்கிறார். அதிலிருந்து சில பகுதிகளை கீழே பிரசுரித்திருக்கிறோம்.—ப.ர்.]

நெல் தான்யம் பஞ்சபூதங்களின் சக்தியால் உற்பத்தியாகி, அவைகளின் சத்து அதிலடங்கியிருக்கிறது.

*　　　*　　　*

நெல் தவிட்டின் நிறம் அந்த தான்யத்தை புசிப்பவரின் தேக நிலைமையை பாதிக்கிறது. தான்யத்தின் முக்கிய சத்தாகையால், தான்யத்தின் தன்மையை அது குறிக்கும். சிகப்பு தவிடுடைய தான்யம் தேகத்தில் உஷ்ணத்தைக் கொடுக்கிறது. வெண்மை, மஞ்சள் நிறமுள்ளவை குளிமை கொடுக்கின்றன.

*　　　*　　　*

அப்போதுதான் அறுவடையான நெல்லிலிருந்து எடுத்த அரிசி, சமையல் செய்வது கொஞ்சம் சிரமமாக இருந்தபோதிலும், ருசியாகவும், அதிக சத்துடையதாகவும் இருக்கும். ஏனெனில், அரிசியிலுள்ள தவிடு, எண்ணெ, தண்ணீர் எல்லாம் அதிகமாக இருக்கிறது. ஆனால் அரிசி முக்கால் வெந்தவுடன் பானையை அடுப்பிலிருந்து இறக்கி, தணலில் வைத்துவிட்டால், சாதம் பக்குவமாக சமையல் ஆகும்.

*　　　*　　　*

தவிட்டை நீக்கிய அரிசி சீக்கிரத்தில் கெட்டுவிடுகிறது. உயிருடன் இருக்கும்போதுதான் பூதங்கள் போஷாப்பளிக்கின்றன. உயிரற்றபின் அவை கெடுதலாகும்படி செய்கின்றன. ஒரு மாதத்திற்குமேல் குத்தின அரிசியை வைத்திருந்தால் புழு தென்படுவதைக் காணலாம்.

•　　　•　　　•

தான்யத்தை நெல்லாகவே அனுப்பி, சேகரித்து வைக்கும்படி செய்ய வேண்டும்.

•　　　*　　　*

சில இடங்களில் செய்யப்படுவதுபோல் நெல்லை பூமியில் புதைத்து வைத்தால், அது சத்தை இழந்துவிடுகிறது. அது சமைத்தால் பசை யிருக்காது.

மண்பாத்திரத்தில் சமைப்பதுதான் ஆரோக்கியத்திற்கேற்றது. சமையலாகும் போது வெளியிலிருக்கும் காற்று பானையின் துவாரங்கள் வழியாக உட்சென்று, ஆகாரத்தை குளிர்ச்சியாக்குகிறது.

* * *

செயற்கை உஷ்ணம் தான்யத்திலுள்ள சத்துக்களை முழுமையுமாவது, கொஞ்சமாவது அழித்துவிடுகிறது. கொஞ்சம் நெல்லை எடுத்து செயற்கை நெருப்பில் காய்ச்சினால் அதில் முளை கிளம்புவதில்லை. அதிலுள்ள உயிர் சத்து செத்துவிடுகிறது. சூரிய உஷ்ணம் அப்படியல்ல. நெல்லை விதைக்குமுன் வெயிலில் உலர்த்துவார்கள். அது தான்யத்திற்கு புத்துயிர் கொடுக்கிறது.

* * *

ஆகாரம் தேகாரோக்யத்திற்கு உகந்ததாக இருக்கவேண்டுமானால், அது மிதமான சொல்ப நெருப்பில் பக்குவப்படவேண்டும்.

* * *

பழையகால ஹிந்து சம்பிரதாயமான வரட்டி நெருப்பில் மண்பாத்திரங்களில் சிறுவர்களுக்கு அன்னம் தயார்செய்யும் வழக்கம் இன்னும் பல குக்கிராமங்களில் இருந்துவருகிறது.

* * *

மில்லிலிருந்து குத்தப்பட்டு வெளிவரும் அரிசியை கையில் வைத்துக் கொண்டால் மிக சூடாகயிருக்கிறது. ஏனெனில் மில்லில் குத்தப்படும்போது வெளிகாற்று அதன்மேல் படுவதில்லை. தான்யம் வரண்டிருக்கிறது.

* * *

புழுக்கலரிசி யானது இரண்டுதரம் வேகவைக்கப்பட்ட அரிசி. அப்படி இரண்டுதரம் நெருப்பில் காய்வதால் சத்து குன்றிவிடுகிறது.

* * *

ஆகாரம் புஷ்டியளிக்கவேண்டுமானால், அது ருசியாகவும், நல்ல வாசனை கொண்டதாகவும் இருக்கவேண்டும். மூக்கிற்கு வாசனையற்ற ஆகாரம் வயிற்றுக்கும் ஆகாது.

* * *

வைக்கோலிலாவது, கோணிப்பைகளிலாவது சேகரித்து வைக்கப்பட்ட தான்யத்திலிருந்துதான் முளை கிளம்பும். அதிலில்தான் தேவையான உஷ்ணமும், குளிர்ச்சியும் உள்ளே செல்லமுடியும். முளை கிளம்பாத தான்யம் சத்து அற்றது.

* * *

தவிட்டுடன் அரிசியை எப்படி சமைப்பது, சமைத்தால் அரிசி தவிட்டை விட்டு வெளியே கிளம்பும். இதை நீக்க சமைப்பதற்குமுன் அரிசியை தண்ணீரில் ஒருமணி நேரத்திற்குமேல் ஊறவைக்கவேண்டும். அப்போது வெளியோடு மிருதுவாகி சமைக்கும்போது உடைந்துபோகாது. அரிசியை தண்ணீரில் களைந்து, அந்த கழுநீரை வெளியில் கொட்டிவிடுவது கூடாது.

* * *

ஏதாவது அமுக்கு இருந்தால் பாத்திரத்திலுள்ள தண்ணீரை தான்யத்தின்மேல் படாமல், வடினால் போதும். அது நீங்கிவிடும்.

* * *

புசிக்கும் ஆகாரத்தில் சத்து இருந்தால், கொஞ்சம் புசித்தாலும் பசி தீரும். சாதாரணமாக ஒருவனுக்கு ஒருநாளைக்கு 2½ ஆழாக்கு மில்குத்தல் அரிசி தேவையானால், கைக்குத்தல் அரிசி 2 ஆழாக்கு போதும். நெல்லை கையால் குத்துவதால் முதல் செலவு கூலியாட்கள் செலவு ஏற்படாமலும், இதர அனுகூலங்களுடன் உணவுபொருள்கள் ஐந்தில் ஒரு பங்கு அதிகப்படி கிடைக்கும். அவ்வளவு அதிக ஆகார உற்பத்தி செய்வதுபோல் ஆகும்.

---

# நெல் பயிரும் மீன் வளர்த்தலும்.

ஜப்பான் தேசத்தில் ஜூன் மாதத்தில் நெல் வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்ச ஆரம்பிக்கும்போது, 1, 2 அங்குலமுள்ள சிறிய மீன்குட்டிகளை தகுந்த இடங்களில் விடுவதுண்டு. அக்டோபர் மாதம் அறுவடையாகும்போது இவை 8,10 அங்குலம் வளர்ந்திருக்கும். விற்பனைக்கு ஏற்றதாக இருக்கும். வயலிலுள்ள உஷ்ணமும் புஷ்டியான ஆகாரத்திற்கு தேவையான வஸ்துக்கள் இருப்பதாலும் நன்றாக வளர்கின்றன. வயலில் தண்ணீர் குறைந்துவிட்டால், பயிர் செய்பவன் வயலின் ஒரு மூலையில் ஒரு சிறு பள்ளம் வெட்டி, அதிக தண்ணீர் வயலில் வரும் வரையில், மீன்களை அதில் விட்டுவிடுவான். நெல்கதிரை நாசமாக்கும் அநேக பூச்சிகளை இந்த மீன்கள் கொன்றுவிடுவதால், நெல்பயிர் விருத்தியடைகிறது. இந்த மீன்கள் வயலில் அப்படியும் இப்படியும் போகும்போது, நெல்கதிர்கள் அசைக்கப்பட்டு அவைகளிலிருந்து கீழே விழும் நாசகாரி பூச்சிகள் இவைகளால் புசிக்கப்படுகின்றன. மேலும், இந்த நடமாட்டம் பூமியை களறி மண்ணை மிருதுவாக்கவும் உபயோகமாகிறது. சிறு கொடிகளை தின்பதால் கதிர் தடையின்றி வளர்வதுடன், இந்த மீன்களின் மலம் பயிருக்கு நல்ல எருவாகயிருக்கிறது.

வயல்களில் இடம் அதிக ஆழமில்லாமல் விஸ்தாரமாக இருப்பதால், வயலில் ஏதாவது மேலே பறக்கும் பறவையின் நிழல் தெரிந்தாலும், காற்றினால் கதிர்கள் சப்தம் செய்தாலும், மீன்கள் சுறுசுறுப்பாக ஓடியாடுவதால், அவைகள் புஷ்டியாக வளர்கின்றன. டெல்டாக்களில் தண்ணீர் கொஞ்சம் உப்பாக இருப்பதால், இவைகளை கிருமிகள் பிடிப்பதில்லை.

---

# வர்த்தமானங்களும், குறிப்புகளும்.

சமீபத்தில் எடுத்த கணக்குப்படி நம் மாகாணத்தில் 22,870 ஏகராக்களில் சாத்துக்குடி ஆரஞ்சுபழங்கள் பயிர் செய்யப்படுகிறது. இந்தியாவில் இந்த உற்பத்தியில் நம் மாகாணமே முதன்மையாக இருக்கிறது.

* * *

ஒரு அவுன்ஸ் தக்காளி விதையிலிருந்து 2,000 செடிகள் உண்டாகின்றன. 4 அல்லது 5 அடிக்கு 5 அடி தூரத்தில் நட்டால், 3 அவுன்ஸ் விதையை ஒரு ஏகராவில் விதைக்கலாம்.

* * *

சென்னை கைத்தறி நெசவாளர் சங்கம் யுத்தத்திற்கு 40 லக்ஷம் கஜம் துணிகளும், 6,82,000 துண்டுகளும் கைகுட்டைகளும் செய்து கொடுத்திருக்கிறது. 25,000 தறிகள் வேலை செய்தன.

---

# மதராஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

---

தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு:

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடேண்டு :

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதராஸ் கார்பரேஷனுக்கும், மதராஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

ஸெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

---

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. விய்யன்னா, பி.ஏ., பி.எல்., 187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதராஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும் சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில் மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது

# ஸௌத் இந்தியா கோஆபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதராஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடெண்ட்)

---

கோஆபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | **1,30,00,000.** |
| க்ஷேமநிதி | — | **10,00,000.** |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

**வி. வெங்கடாசலம்**, எம். ஏ., பி. எல்.,
காரியதரிசி.